மக்களுக்காகச் சிந்திப்போம்

# மக்கள் சிந்தனைப் பேரவையின்

# தேசிய அறிவியல் தினம்

## இணையவழி நிகழ்ச்சி

**நாள் : 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை**

**மதியம் 2.00 மணி**

நிகழ்ச்சி அறிமுகம்

திரு **த.ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள்

தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை

சிறப்புரை

**அறிவியலாளர்**

பேராசிரியர் **T. ராமசாமி** அவர்கள்

முன்னாள் செயலாளர், இந்திய அரசின் அறிவியல் – தொழில்நுட்பத்துறை

தலைப்பு

**அறிவியல் : சமூகத்தின் ஒரு பகுத்தறிவுக் கண்ணாடியா?**

**YOUTUBE AND FACEBOOK LIVE - makkalsinthanaiperavaierode**

அனைவரும் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறோம்




# அறிவியலாளர்

# பேராசிரியர் T.ராமசாமி

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ( DST ) செயலாளராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தோல் தொழில்நுட்பத்துறையில் ( Leather Technology ) இளநிலை, முதுநிலைப் பட்டங்களைப் பெற்றவர். இங்கிலாந்தில் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் குரோமியம் வேதியியலில் டாக்டர் பட்டம் பெற்று, அமெரிக்காவில் ' வைன் ஸ்டேட் ' மற்றும் ' நியூ கேசில்' பல்கலைக்கழகங்களில் தொடர் மேலாய்வுகள் செய்தவர். பின்னர் சென்னை மத்திய தோல் ஆய்வு நிறுவனத்தில் ( CLRI ) இயக்குனராகப் பணியாற்றியவர். அப்போது தோல் துறையில் சுற்றுச்சூழல் காப்புக்காக இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் தமிழ்நாட்டில் சுமார் 2,50,000 பணியிடங்கள் காப்பாற்றப்பட்டதோடு, ஆண்டுத் தொழில்நுட்ப முதலீடு ரூ 6,000 கோடியளவுக்கு உயர்ந்தது.

உலகப் புகழ்பெற்ற அறிவியல் – தொழில்நுட்ப இதழ்களில் 250–க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை பேராசிரியர் T.ராமசாமி எழுதி வெளியிட்டிருக்கிறார். தனது ஆராய்ச்சிகளின் விளைச்சலாக 37 காப்புரிமங்களைப் பதிவு செய்திருப்பவர். அவற்றுள் 12 வணிகப் பொருள்களுக்கு வழிகாட்டியிருக்கின்றன.

அறிவியல் துறையில் இவரது சாதனைகளைகளுக்காக இந்திய அரசு 1993–ல் 'சாந்தி ஸ்வருப் பட்நாகர் விருதை 'யும், 2001–ல் ' பத்மஸ்ரீ ' விருதையும், 2014–ல் ' பத்மபூஷன் ' விருதையும் வழங்கியுள்ளது. இவரது நிர்வாகத் திறமையை அறிந்து இந்திய அறிவியல்–தொழில்நுட்பத்துறையின் செயலாளராக இந்திய அரசு இவருக்கு ஐந்து முறை தொடர் பணிநீட்டம் செய்திருக்கிறது.